தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை– திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப.,

நக.எண். 3166 /2020 பேரூ. 2 நாள்: 28 .07.2021

பொருள்– **பணியாளர்குழு–** பேரூராட்சிகள் நிர்வாகம் தஞ்சாவூர் மண்டலம் – தஞ்சாவூர் மாவட்டம் – பேரூராட்சிகளில் 2008–2009 முதல் 2017–2018 ஆண்டு வரையிலான ஏற்பட்ட 9 காலிப்பணியிடங்களில் மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீன்படி இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிடங்களில் பதவி உயர்வின் மூலம் நேரடி பணி நியமனம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது –தனியர்களது பணியினை அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை–
1. அரசு ஆணை நிலை எண். 150 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள் 19.8.98.
2. அரசாணை (நிலை) எண். 169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 06.12.2019.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்–நடவடிக்கைகள் ந.க எண். 1044/2015 பேரூ. 2 நாள் 17.12.2019.
4. செயல் அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.
5. சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேடுகள்.
6. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

---

ஆணை

பார்வையில் 1ல் காணும் அரசு ஆணையில், பேரூராட்சிகள் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணி, இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களை 20 சதவீதத்திற்கும் மிகாத பணியிடங்களில், பேரூராட்சிகளில் பணிபுரியும், தகுதிவாய்ந்த பதிவறு எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற அனைத்து கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை பணிமாறுதல் மூலம் நியமனம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்ட பேரூராட்சிகளில் 2008–2009 முதல் 2017–2018ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் நிலையில் கணக்கிடப்பட்ட மொத்த 35 காலிப் பணியிடங்களில், பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில், பின்வரும் 9 நபர்களுக்கு பார்வை 1இல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இவர்களை பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்/வரித்தண்டலராக பதவி உயர்வு அளிக்க 1954ம் ஆண்டைய தேர்வாணைய ஒழுங்கு முறைகளில், ஒழுங்கு முறை விதி 16 (பி)ன் பிற்பகுதியின்படி பணியமர்த்தப்பட்டவர்களின் பணி மூப்பினை அவர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இசைவளித்துள்ளது.

செயல் அலுவலர்
மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்

இந்நேர்வில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும், கீழ்நிலைப் பணியாளர்களுக்கு, 20 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில், பார்வை 2ல் காணும் அரசாணையில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது (9) நபர்களுக்கு பேரூராட்சிகளில் காலியாக உள்ள அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிடங்களில், நிபந்தனைகளுக்குட்பட்டு, பார்வை 3இல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி பதவி உயர்வின் மூலம் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

பார்வை 3இல் காணும் விவரப்படி நியமனம் செய்யப்பட்ட 9 நபர்களும் அவர்களது பணியினை, அவர்கள் அமைச்சுப் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யக் கோரி தனியர்களால் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள், பார்வை 4இல் காணும் விவரப்படி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களால் பரிந்துரை செய்து கருத்துருவாக பெறப்பட்டுள்ளது. இக்கருத்துருக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை பரிசீலிக்கப்பட்டதில், தனியர்கள் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது தேதி வரை மேற்காணும் பணியாளர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ, தண்டனைகளோ ஊதிய உயர்வினை பாதிக்கும் வகையிலான விடுப்புகளோ ஏதும் இல்லை, இவர்களது பணிக்காலத்தில் எந்தவித பணிமுறிவும் ஏற்படவில்லை.

எனவே, பார்வை 2ல் காணும் அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்பதாலும், இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓராண்டு காலம் பணிமுறிவின்றி பணிபுரிந்து வருவதாலும், அவர்களது பணி நிலையான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் நிலையில், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர்பெயர், பதவி தற்போது பணிபுரியும் பேரூராட்சி. (திருவாளர்கள்) | அரசு நிலையாக்கப்பட்ட பணியிடமான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | சி. சேகர்<br>வரித்தண்டலர்,<br>பெருமகளூர் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>23.12.2019 மு.ப. | 23.12.2019 மு.ப. |
| 2 | எஸ். ரமேஷ்குமார்<br>இளநிலை உதவியாளர்,<br>வேப்பத்தூர் பேரூராட்சி. | இளநிலை உதவியாளர்,<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |
| 3. | நா. குணசேகரன்<br>வரித்தண்டலர்,<br>திருபுவனம் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |

செயல் அலுவலர்
மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்

| வ. எண். | பணியாளர்பெயர், பதவி தற்போது பணிபுரியும் பேரூராட்சி. (திருவாளர்கள்) | அரசு நிலையாக்கப்பட்ட பணியிடமான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 4 | ஆர் .ராஜன்<br>இளநிலை உதவியாளர்,<br>திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி | இளநிலை உதவியாளர்<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |
| 5 | மு.மணிகண்டன்<br>வரித்தண்டலர்,<br>திருவையாறு பேரூராட்சி. | வரித்தண்டலர்<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |
| 6 | வெ. பன்னீர்<br>வரித்தண்டலர்,<br>திருப்பனந்தாள் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>18.12.2019 பி.ப. | 18.12.2019 பி.ப. |
| 7 | மு. சூரியமூர்த்தி<br>வரித்தண்டலர்,<br>தாராசுரம் பேரூராட்சி. | வரித்தண்டலர்<br>20.12.2019 பி.ப. | 20.12.2019 பி.ப. |
| 8 | வீ. கென்னடி<br>இளநிலை உதவியாளர்,<br>அய்யம்பேட்டை பேரூராட்சி. | இளநிலை உதவியாளர்<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |
| 9 | பெ. லல்லி<br>வரித்தண்டலர்,<br>மெலட்டூர் பேரூராட்சி. | வரித்தண்டலர்<br>20.12.2019 பி.ப. | 20.12.2019 பி.ப. |

28/7/2021

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர் மூலமாக)

நகல்– செயல் அலுவலர், பெருமகளூர், வேப்பத்தூர், திருபுவனம், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, திருப்பனந்தாள், தாராசுரம், அய்யம்பேட்டை மற்றும் மெலட்டூர் பேரூராட்சிகள், தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்– பேரூராட்சிகளின் ஆணையர், நகர் நிர்வாக அலுவலகம், சென்னை.28

நகல்– இருப்பு கோப்பு (பேரூ. 2)

செயல் அலுவலர்
மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்
30/12/2021

ADTP 17/12/19 11.47AM

## தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை– திரு. ம. கோவிந்த ராவ், இ.ஆ.ப.,

ந.க.எண். 1044/ 2015 பேரூ. 2 — நாள்– 17.12.2019

பொருள்– **பணியாளர்குழு** – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – தஞ்சாவூர் மாவட்டம் – பேரூராட்சிகளில் கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – 20 % ஒதுக்கீடு மூலம் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் போன்ற உயர்நிலைப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இசைவினை பெற்று பதவி உயர்வு வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – உரிய பணியிடம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை–
1. அரசாணை (நிலை) எண். 169, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 06.12.2019.
2. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 12412/2018/அ2 நாள் 17.12.2019.
3. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

----------

ஆணை

தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் மாவட்ட பேரூராட்சிகளில் 1998–99ஆம் ஆண்டு முதல் 2007–08ஆம் ஆண்டு வரை இரண்டு நிலுவை காலிப்பணியிடங்கள் (இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்) மற்றும் 2008–09 முதல் 2017–18ஆம் ஆண்டு வரை ஏழு காலிப்பணியிடங்கள் (இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்) ஆக மொத்தம் 9 காலிப்பணியிடங்களில், அரசாணை எண்.150, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.09.1998இன்படி 9 பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீட்டின் அடிப்படையில், இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பதவி உயர்வு வழங்கிட சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் வாயிலாக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட 9 பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளித்து பார்வை 1இல் காணும் விவரப்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படியும், பார்வை 2இல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதத்தின்படியும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 20 சதவீத ஒதுக்கீட்டின் அடிப்படையில், இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க பரிந்துரைக்கப்பட்ட 9 பணியாளர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி பணியிடம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

செயல் அலுவலர்
தஞ்சாவூர் மாவட்டம்

| வ. எண். | பெயர், பதவி மற்றும் தற்போது பணிபுரியும் பேரூராட்சி (திருவாளர்கள்) | வழங்கப்படும் பணியிடம் விவரம் மற்றும் பேரூராட்சி |
|---|---|---|
| 1 | சி. சேகர்<br>பதிவறை எழுத்தர்<br>திருவிடைமருதூர் பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>பெருமகளூர் பேரூராட்சி. |
| 2 | எஸ். ரமேஷ்குமார்<br>துப்புரவு மேற்பார்வையாளர்<br>திருநாகேஸ்வரம் பேரூராட்சி | இளநிலை உதவியாளர்,<br>வேப்பத்தூர் பேரூராட்சி. |
| 3 | நா. குணசேகரன்<br>பதிவறை எழுத்தர்<br>திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>திருபுவனம் பேரூராட்சி. |
| 4 | ஆர் .ராஜன்<br>களப்பணி உதவியாளர்<br>திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி | இளநிலை உதவியாளர்,<br>திருக்காட்டுப்பள்ளி பேரூரட்சி. |
| 5 | மு.மணிகண்டன்<br>பதிவுரு எழுத்தர்<br>அய்யம்பேட்டை பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>திருவையாறு பேரூராட்சி. |
| 6 | வெ. பன்னீர்<br>துப்புரவு பணியாளர்<br>திருபுவனம் பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>திருப்பனந்தாள் பேரூராட்சி. |
| 7 | மு. சூரியமூர்த்தி<br>துப்புரவு மேற்பார்வையாளர்<br>ஆடுதுறை பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>தாராசுரம் பேரூராட்சி. |
| 8 | வீ. கென்னடி<br>களப்பணி உதவியாளர்<br>சுவாமிமலை பேரூராட்சி | இளநிலை உதவியாளர்,<br>அய்யம்பேட்டை பேரூராட்சி. |
| 9 | பெ. லல்லி<br>அலுவலக உதவியாளர்<br>வல்லம் பேரூராட்சி | வரித்தண்டலர்,<br>மெலட்டூர் பேரூராட்சி. |

மேற்காணும் பணியாளர்களை அவர்களுக்கு எதிரே பணியிடம் வழங்கப்பட்டுள்ள பேரூராட்சியில் பணியில் சேருவதற்கு ஏதுவாக தற்போது வகித்து வரும் பணியிலிருந்து விடுவிக்கவும், பணியிடம் வழங்கப்பட்டுள்ள பணியில் சேர அனுமதிக்கவும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டமைக்கும், பணியில் சேர்ந்தமைக்குண்டான அறிக்கையினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## நிபந்தனைகள்

1. இவர்களது நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. வயது, கல்வி, சாதி, சான்றிதழ்களின் விபரங்கள் தவறானவை என தெரிய வந்தால் இவர்களது இப்பணிநியமனம் முன்அறிவிப்பின்றி உடனடியாக ரத்து செய்யப்படும்.

/ உண்மை நகல் /

செயல் அலுவலர்
திருப்பூந்துருத்தி பேரூராட்சி.
தஞ்சாவூர் மாவட்டம்
30/10/2012

2. நியமன ஆணை பெற்றுக் கொண்ட பிறகு அசல் சான்றுகளை நியமனம் செய்யப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலகத்தில் அளித்திட வேண்டும்.

3. இவர்களது பணிமூப்பு, இவர்கள் அமைச்சுப் பணியில் சேர்ந்த நாள் முதல் நிர்ணயிக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

17-12-2015

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள், தஞ்சாவூர் மாவட்டம்.
(சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மூலமாக).

நகல்– பேரூராட்சிகள் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலகம், சென்னை 28.
நகல்– மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர், தஞ்சாவூர் மாவட்டம்.
நகல்– செயல் அலுவலர்கள், திருவிடைமருதூர், பெருமகளூர், திருநாகேஸ்வரம், வேப்பத்தூர், திருக்காட்டுப்பள்ளி, திருபுவனம், அய்யம்பேட்டை, திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை, தாராசுரம், சுவாமிமலை, வல்லம் மற்றும் மெலட்டூர் பேரூராட்சிகள். தஞ்சாவூர் மாவட்டம்.
நகல்– உபரி– 2 (பேரூ. 2).

/ உண்மை நகல் /

செயல் அலுவலர்
மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்
30/12/15